இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 107 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – கார்த்திகை 11 – வியாழக்கிழமை 27 நவம்பர் 2025 – சென்னை 128 + 24 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 107: Thiruvalluvar Year - 2056 - Karthigai 11 - Thursday 27 November 2025 - Chennai 128 + 24 Pages ₹ 5.00

## தமிழர்களை தேசவிரோதிகள் என்று சொல்லும்

# ஆளுநர் ஆர்.என்.ரவியின் ஆணவத்தை அடக்குவோம்!

## ஈரோடு அரசு விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் கடும் எச்சரிக்கை!



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (26.11.2025) ஈரோட்டில் நடைபெற்ற அரசு விழாவில், 235 கோடியே 73 இலட்சம் ரூபாய் செலவிலான 790 முடிவுற்ற பணிகளை திறந்து வைத்து, 91 கோடியே 09 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 23 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார். இவ்விழாவில், அமைச்சர்கள் கே.என்.நேரு, எ.வ.வேலு, சு.முத்துசாமி, மு.பெ.சாமிநாதன், மா.மதிவேந்தன், திருமதி. என்.கயல்விழி செல்வராஜ், நாடாளுமன்ற உறுப்பினர்கள் அந்தியூர் செல்வராஜ், கே.இ.பிரகாஷ், கே.சுப்பராயன், சட்டமன்ற உறுப்பினர்கள் வி.சி.சந்திரகுமார், ஏ.ஜி.வெங்கடாசலம், ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் எஸ்.கந்தசாமி, ஈரோடு மேயர் திருமதி நாகரத்தினம், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**ஈரோடு, நவ. 27 -**

**“தமிழர்களை தேச விரோதிகள் என்று சொல்லும் ஆளுநர் ஆர்.என்.ரவியின் ஆணவத்தை அடக்குவோம்” என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், ஈரோட்டில் நடைபெற்ற அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் உரையாற்றும்போது கடும் எச்சரிக்கை விடுத்தார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (26.11.2025) ஈரோடு மாவட்டத்தில் நடைபெற்ற அரசு விழாவில், முடிவுற்ற பணிகளை திறந்து வைத்து, புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கி ஆற்றிய உரை வருமாறு:-

ஈரோடு மாவட்ட அரசு விழாவில் பங்கேற்று சிறப்பித்துக் கொண்டிருக்கக்கூடிய உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கத்தை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இன்றைய நவீனத் தமிழ்நாட்டின் வரலாற்றுக்கு அடித்தளமான தந்தை பெரியாரை தந்த இந்த ஈரோட்டுக்கு, திராவிட இயக்கத்தின் முதன்மைத் தொண்டனான நான் பெருமையோடு இங்கே வந்திருக்கிறேன்.

ஈரோட்டுப் பூகம்பம் தந்தை பெரியார் இல்லையென்றால், திராவிட இயக்கம் இல்லை; பேரறிஞர் அண்ணா இல்லை; முத்தமிழறிஞர் கலைஞர் இல்லை; ஏன், தமிழ்நாட்டிற்கு இந்தளவுக்கு வளர்ச்சியும் இருந்திருக்காது!

ஈரோட்டைப் பற்றி சொல்ல வேண்டும் என்றால், இது, மஞ்சள் நகரம்! சந்தன நகரம்! தொழில் நகரம்! ஜவுளி நகரம்! கைத்தறி நகரம்! இயற்கை நகரம்! விடுதலை வீரர்களைத் தந்த நகரம்! இத்தகைய பெருமைமிகு ஈரோட்டில், இந்த அரசு விழாவை சிறப்பாக மிகுந்த சிறப்போடு ஏற்பாடு செய்திருக்கிறார் நம்முடைய கழகத்திற்கு கிடைத்த ‘நல்ல முத்து’ அமைச்சர் முத்துசாமி அவர்கள்! அமைதியானவர்! அடக்கமானவர்! அதே நேரத்தில், ஒரு வேலையை சிறப்பாக செய்து முடிப்பதில் ஆற்றல்மிக்கவர்! இரண்டே வரிகளில் சொல்ல வேண்டும் என்றால், அனுபவத்தால் மூத்தவர்! உழைப்பினால் இளைஞர்!

இந்த நிகழ்ச்சியை மாபெரும் மாநாட்டைப் போல ஏற்பாடு செய்திருக்கின்ற அவருக்கும், அவருக்குத் துணை நிற்கும் ஈரோடு மாவட்ட ஆட்சியர் எஸ்.கந்தசாமி அவர்களுக்கும், அதுபோல மாவட்டத்தின் அரசு அதிகாரிகளுக்கும் என்னுடைய மனமார்ந்த பாராட்டுக்களையும், வாழ்த்துகளையும் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்!

இந்த மாபெரும் விழாவில், 91 கோடியே 9 இலட்சம் ரூபாய் மதிப்பிலான 23 புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டி, 235 கோடியே 73 இலட்சம் ரூபாய் மதிப்பிலான 790 முடிவுற்ற பணிகளை திறந்து வைத்து, 1 இலட்சத்து 84 ஆயிரத்து 491 பேருக்கு, 278 கோடியே 62 இலட்சம் ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் வழங்குவது என்று, 605 கோடியே 44 இலட்சம் ரூபாய் மதிப்பிலான திட்டங்களை மக்களுக்கு அர்ப்பணிக்கும் வாய்ப்பு இன்றைக்கு எனக்கு கிடைத்திருக்கிறது!

### ரூ.605.44 கோடியில் மக்களுக்கான திட்டங்கள்!

இந்த விழாவில், கலந்து கொள்ள என்னிடம் தேதி கேட்டபோது, “கடந்த ஆண்டு மார்ச் மற்றும் டிசம்பர் மாதங்களில், பொள்ளாச்சி மற்றும் ஈரோட்டில் நடைபெற்ற அரசு நிகழ்ச்சியில் நான் அறிவித்த 12 அறிவிப்புகளின் ஸ்டேட்டஸ் - நிலை என்ன?” என்று நான் கேட்டேன். அதிகாரிகள் என்னிடம் பகிர்ந்து கொண்ட விவரங்கள், அறிவிப்புகள் எல்லாம் பல்வேறு நிலைகளில் செயல்பாட்டிற்கு வந்து கொண்டிருக்கின்றன.

குறிப்பாக ஈரோடு மாநகராட்சியில், 106.78 கிலோ மீட்டர் நீளத்துக்கு சாலை சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும் என்று அறிவித்தோம். 79.83 கிலோ மீட்டர் நீளத்திற்கு பணிகள் முடிக்கப்பட்டு எஞ்சியுள்ள பணிகள் நடைபெற்று வருகிறது. இந்தப் பணிகள் அனைத்தும் டிசம்பர் 10க்குள் முடிக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டுக்கு கொண்டு வரப்பட இருக்கிறது!

என்னைப் பொறுத்தவரைக்கும், இந்த விழாவிற்கு வந்தோம், அறிவித்தோம் என்று இருக்க மாட்டேன்! அத்தனை அறிவிப்பையும் செயல்படுத்திக் காட்டக்கூடிய அரசுதான் நம்முடைய திராவிட மாடல் அரசு!

கடந்த நான்கு ஆண்டு காலத்தில் ஈரோடு மாவட்டத்துக்கு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் செய்து தரப்பட்டுள்ள திட்டங்களைச் சொல்வதாக இருந்தால் அதற்கே ஏறக்குறைய 2, 3 மணி நேரம் ஆகும். எனவே தலைப்புச் செய்தியாக சிலவற்றை மட்டும் உங்களுக்கு நினைவூட்ட விரும்புகிறேன்.

- ஈரோடு மாநகராட்சி பேருந்து நிலையத்தை திறந்து வைத்திருக்கிறேன்.
- ஜெயராமபுரத்தில், மாவீரன் பொல்லான் அவர்களுக்கு முழு திருவுருவச் சிலையுடன் அரங்கம் அமைத்து, அதை திறந்து வைத்துவிட்டுதான் இந்த மேடைக்கு நான் வந்திருக்கிறேன்.

தொடர்ச்சி 3–ஆம் பக்கம்

# இளந்தலைவருக்கு பிறந்தநாள் வாழ்த்துச் சொல்ல வருவோரின் கனிவான கவனத்திற்கு !



## கழக இளைஞர் அணி துணைச் செயலாளர்கள் வேண்டுகோள்!

**சென்னை,நவ.27–**

**கழக இளைஞர் அணிச் செயலாளர், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இன்று தமது பிறந்தநாளையொட்டி கழகத்தினரிடம் வாழ்த்துப் பெறுகிறார். இதுகுறித்து கழக இளைஞர் அணியின் துணைச் செயலாளர்கள் விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:**

கழக இளைஞர் அணிச் செயலாளர் - தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 49-வது பிறந்தநாள் இன்று (27.11.2025) கொண்டாடப்படுகிறது. இதனையொட்டி, கழக இளைஞர் அணி துணைச் செயலாளர்கள் வெளியிட்டுள்ள அறிக்கையில், “இளந்தலைவர் அவர்கள் இன்று காலை முதலமைச்சர்-திராவிட மாடல் நாயகர் கழகத் தலைவர் அவர்களை நேரில் சந்தித்து வாழ்த்து பெறுகிறார். அதன்பிறகு தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோர் நினைவிடங்களில் மரியாதை செலுத்துகிறார்.

பின்னர் குறிஞ்சி இல்லத்தில் கழக நிர்வாகிகள், உடன்பிறப்புகளை சந்தித்து பிறந்த நாள் வாழ்த்துப் பெறுகிறார்.

தமிழ்நாடு முழுவதும் பல்வேறு மாவட்டங்களில் இருந்து இளந்தலைவரை சந்தித்து வாழ்த்த வரும் உடன்பிறப்புகளின் வசதிக்காக குறிஞ்சி இல்லத்தில் பாதுகாப்பு ஏற்பாடுகளும், மதிய உணவு, குடிநீர் உள்ளிட்ட அனைத்து அடிப்படை வசதிகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. அனைவரும் வரிசையில் பொறுமைகாத்து வந்து வாழ்த்திடுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

மேலும், இளந்தலைவரை வாழ்த்த வரும் கழக நிர்வாகிகள், உடன்பிறப்புகள் சால்வைகள், பூங்கொத்துகளைத் தவிர்த்துவிட்டு நூல்கள், கருப்பு - சிவப்பு கரைவேட்டிகள், மகளிர் சுய உதவிக்குழுக்கள் தயாரிக்கும் பொருட்களை பரிசாக வழங்கலாம்” எனத் தெரிவித்துள்ளனர்.